# முன்னுரை

புகழ்கள் அனைத்தும் எல்லாவற்றையும் படைத்து பரிபாலனம் செய்யும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும்!

ஸலாதும், ஸலாமும் எங்கள் தலைவர் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார் மீது அவர்களது சங்கைமிகு ஸஹாபாக்கள் மீதும் உண்டாகட்டுமாக !

மார்க்கத்தில் கட்டாயமாக கற்கப்பட வேண்டிய கல்வியை தேடிக்கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் பெருந் கடமையாகும். என்பதாக எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

தன்னையும், தன் குடும்பத்தையும் கொடூரமான நரக வேதனையிலிருந்து பாதுகாப்பதானது பருவமடைந்த ஒவ்வொருவரும் கட்டாயம் கற்றேயாக வேண்டிய கல்வியை கற்பதன் மூலமே சாத்தியமாகும். ஏனேனில் மார்க்க கடமைகளை சரிவர அறிந்து அதனை நிறைவேற்றாமலும், மார்க்கத்தில் தடைவிதிக்கப்பட்டவைகளை அறிந்து அவைகளை தவிர்ந்து கொள்ளாமலும் ஒருவர் தக்வாவுள்ளவராக ஆக முடியாது.

நம் மீது விதிக்கப்பட்ட கடமைகளையும், நமக்கு விலக்கப்பட்டுள்ள ஹறாம்களையும் அறிய ஓரே வழி கற்றுக் தேர்ந்த அறிஞர்களிடம் சென்று இஸ்லாமிய கல்வி ஞானம் பெறுவதேயாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு, ஜம்இய்யதுல் ம'ாரிஉல் ஹைரிய்யஹ் அல் இஸ்லாமிய்யஹ்விலே இருக்கும் இஸ்லாமிய பாடங்கள், மற்றும் ஆய்வுகளுக்கான குழு பல நூல்களை ஆய்வு செய்த போது அவைகள் பூரணமான இஸ்லாமிய தகவல்களை கொண்டதாகவும், சரியான தகவல்களை கொண்டதாகவும் காணப்படாததால். சிறார்களின் வினைத்திறனுக் கேட்ப வாசிக்கவும், புரிந்து கொள்ளவும் இலகுவானதான நூற்களை தயாரித்தலில் பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுப்பட்டனர். அதன் பிரதிபலனாக அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என்ற அற்புதமான நூலை தயாரித்து வெளியிட்டுள்ளனர். இனிமையான சொற்களை கொண்டும், புரிந்துகொள்ள இலகுவான வாக்கிய அமைப்பை

கொண்டும் உருவாக்கப்பட்ட இந்த நூற்களை ஒரு பிள்ளை முறையாக கற்கும் போது அப்பிள்ளை இஸ்லாமிய மார்க்கத்தில் அறிந்திருக்கு வேண்டிய கடமைகளை, நற்குணங்களை அறிந்த ஒரு பிள்ளையாக ஆகிவிடும்.

5 பாகங்களைக் கொண்ட இந்த நூலில் ஒவ்வொரு பாகமும் 3 பிரிவுகளை கொண்டுள்ளது. முதல் பிரிவானது இஸ்லாமிய கோட்பாடுகளை விபரிப்பதாகவும், இரண்டாம் பகுதி இஸ்லாமிய வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் முறைகளை விபரிப்பதாகவும், மூன்றாவது பிரிவு இஸ்லாம் கற்றுத் தரும் நற்குணங்களை விபரிப்பதாகவும் அமைந்துள்ளது.

அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என பெயரிடப்பட்ட இந்நூல் தாங்களது பிள்ளைகள் இவ்வுலகிலும், மறு உலகிலும் வெற்றிபெற வழிவருக்கமெனவும், தாங்களது பிள்ளை நேர்த்தியான நல்லொழுக்கமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப உதவி செய்யுமெனவும் நம்புகிறோம்.

# அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ்

# பாகம் - 02

# فصل العقائد

## இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய விபரம்

**பாடம் : 1** **الدرس : 1**

## أفضل الأعمال

### மிகச்சிறந்த அமல்

"قال رسول الله ﷺ أفضل الأعمال إيمان بالله ورسوله "

( رواه البخاري )

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :-

**"மிகச் சிறந்த அமல் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் சரியான முறையில் ஈமான் (நம்பிக்கை) கொள்வதாகும்."**

( அறிவித்தவர்:- அல் இமாம் அல் புஹாரீ )

الإيمان بالله ورسوله محمد ﷺ هو أفضل الأعمال وأحبها إلى الله تعالى .

அல்லாஹ்வையும் அவனது தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் நம்பிக்கை கொள்வது அல்லாஹ்வினால் பொருந்திக் கொள்ளப்பட்ட மிகச்சிறந்த அமலாகும்.

الأعمال الصالحة :كالصلاة والصيام والحج والزكاة

لا تصح إلا مع الإيمان بالله ورسوله .

தொழுகை, நோன்பு, ஹஜ், ஸகாத் போன்ற ஸாலிஹான அமட்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களையும் சரியான முறையில் நம்பிக்கை கொள்வதின் மூலமே ஏற்றுக்கொள்ளப்படும்.

الكافر لا تقبل منه الأعمال الصالحة .

காபிரான மனிதனிடமிருந்து ஸாலிஹான அமட்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا رسول الله صلى الله على محمد ﷺ

உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமே என்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உள்ளத்தினால் உண்மைப்படுத்தி உறுதி கொண்டு நாவினால் மொழிகின்றேன்.

1- ما هو أفضل الأعمال ؟ اذكر الحديث .
2- عدد بعض الأعمال الصالحة.
3- من الذي لا تقبل منه الأعمال الصالحة .

**பாடம் : 2** **الدرس : 2**

## الله ربي

# அல்லாஹ் என்னைப் படைத்துப் பரிபாலிக்கக் கூடியவன்

الله خالق كل شئ

அல்லாஹ் அனைத்து வஸ்துக்களையும் படைத்தவன்.

الله قادر على كل شئ

அல்லாஹ் சீரான பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து வஸ்துக்கள் மீதும் வல்லமையுடையவன்.

الله عالم بكل شئ

அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவன்.

الله مالك كل شئ

அல்லாஹ் அனைத்து வஸ்துக்களையும் ஆட்சிபுரிபவன்.

الله ليس له شبيه

அல்லாஹ்விற்கு ஒப்புவமைகள் இல்லை.

الله ليس له شريك

அல்லாஹ்விற்கு நிகராக எதுவுமில்லை.

الله لا يحتاج إلى شئ

அல்லாஹ் எதன் பக்கமும் தேவைகாணமாட்டான்.

الله ليس كمثله شئ

அல்லாஹ் எந்த ஒன்றுக்கும் எவ்விதத்திலும் ஒப்பாகமட்டான்.

ذكر

سبحان الله وبحمده سبحان الله العظيم الحمد لله رب العالمين

**பாடம் : 3** **الدرس : 3**

## الله لا يشبه شيئا

# அல்லாஹ் எந்த ஒன்றுக்கும் ஒப்பாகமாட்டான்

قال الله تعالى :

ليس كمثله شئ

سورة الشورى | ءاية 11

**அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“அல்லாஹ் எந்த ஒன்றுக்கும் எவ்விதத்திலும் ஒப்பாகமாட்டான்.”**

**(அத்தியாயம் : அஷ்-ஷுறா வசனம் : 11)**

الله خلق النور أي الضوء فلا يشبه النور.

அல்லாஹ் ஒளியைப் படைத்தான். எனவே அவன் ஒளிக்கு ஒப்பாக மாட்டான்.

الله خلق الهواء فلا يشبه الهواء .

அல்லாஹ் காற்றைப் படைத்தான். எனவே அவன் காற்றுக்கு ஒப்பாகமாட்டான்.

الله خلق الشمس فلا يشبه الشمس .

அல்லாஹ் சூரியனைப் படைத்தான். எனவே அவன் சூரியனுக்கு ஒப்பாகமாட்டான்.

الله خلق القمر فلا يشبه القمر .

அல்லாஹ் சந்திரனைப் படைத்தான். எனவே அவன் சந்திரனுக்கு ஒப்பாகமாட்டான்.

الله خلق الإنسان فلا يشبه الإنسان.

அல்லாஹ் மனிதனைப் படைத்தான். எனவே அவன் மனிதனுக்கு ஒப்பாகமாட்டான்.

الله خلق الملائكة فلا يشبه الملائكة .

அல்லாஹ் மலக்குமார்களைப் படைத்தான். எனவே அவன் மலக்குமார்களுக்கு ஒப்பாகமாட்டான்.

الله خلق كل شئ فلا يشبه شيئا .

அல்லாஹ் அனைத்து வஸ்த்துக்களையும் படைத்தான். எனவே அவன் எதற்கும் ஒப்பாகமாட்டான்.

ذكر

اللهم إني أعوذ بك من همزات الشياطين .

أسئلة

1. اذكر ءاية تدل على أن الله لا يشبه شيئا .
2. عدد بعض الأشياء التي خلقها الله .

பாடம் : 4 الدرس : 4

## الله لا يحتاج إلى شئ

## *அல்லாஹ் எதன் பக்கமும் தேவைகாண மாட்டான்*

الله خلق البشر'

الله لا يحتاج إلى البشر.

அல்லாஹ் மனிதனைப் படைத்தான். எனவே அவன் மனிதனின் பக்கம் தேவைகாண மாட்டான்.

الله خلق الهواء

الله لا يحتاج إلى الهواء .

அல்லாஹ் காற்றைப் படைத்தான். எனவே அவன் காற்றின் பக்கம் தேவைகாண மாட்டான்.

الله خلق الأرض

الله لا يحتاج إلى الأرض .

அல்லாஹ் பூமியைப் படைத்தான். எனவே அவன் பூமியின் பக்கம் தேவைகாண மாட்டான்.

الله خلق السماء

الله لا يحتاج إلى السماء .

அல்லாஹ் வானத்தைப் படைத்தான். எனவே அவன் வானத்தின் பக்கம் தேவைகாண மாட்டான்.

الله خلق العرش'

الله لا يحتاج إلى العرش.

அல்லாஹ் அர்ஷைப் படைத்தான். எனவே அவன் அர்ஷின் பக்கம் தேவைகாண மாட்டான்.

الله خلق الملائكة'

الله لا يحتاج إلى الملائكة .

அல்லாஹ் மலக்குமார்களைப் படைத்தான். எனவே அவன் மலக்குமார்களின் பக்கம் தேவைகாண மாட்டான்.

الله خالق كل شئ '

الله لا يحتاج إلى شئ .

அல்லாஹ் அனைத்து வஸ்த்துக்களையும் படைத்தான். எனவே அவன் எதன் பக்கமும் தேவைகாண மாட்டான்.

دعاء

الحمد لله الذي كفاني وءاواني.

الحمدلله الذي أطعمني وسقاني .

**பாடம் : 5** **الدرس : 5**

## شرح صفات الله تعالى

### அல்லாஹ்வின் பண்புகள் பற்றிய விரிவாக்கம்

قال الله تعالى

ولله المثل الأعلى

سورة النحل ءاية 60

أي لله صفات ليست كصفات غيره

அல்லாஹ் கூறியுள்ளான் :

விளக்கம் :-

**“படைப்புக்களின் பண்புகளுக்கு ஒப்பாகாத பண்புகள் அல்லாஹ்வுக்கு உள்ளன.”**

(அத்தியாயம் :- அந்-நஹ்ல் வசனம் : 60 )

ومن هذه الصفات ثلاث عشرة صفة تجب معرفتها على كل مكلف وهي :

புத்தியுள்ள பருவத்தை எத்திய முஸ்லிமான ஒவ்வொருவரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய அல்லாஹ்வின் பதின்மூன்று பண்புகள்.

அவையாவன :-

1. الوجود : الله موجود لا بداية ولا نهاية لوجوده .

1. உள்ளமை : அல்லாஹ் ஆரம்பமும் முடிவுமின்றியுள்ளவன்.

2. الوحدانية : الله واحد لا شريك له ولا معبود بحق سواه .

2. இணையின்றித் தனித்திருத்தல் : அல்லாஹ் இணையின்றித் தனித்தவன். அவனுக்கு எந்த ஒரு இணையுமில்லை. உண்மையில் வணங்கி வழிப்படத்தகுதியானவன் அவனையன்றி வேறுயாருமில்லை.

3. القيام بالنفس : الله لا يحتاح إلى غيره .

3. தேவையற்றிருத்தல் : அல்லாஹ் எதன் பக்கமும் தேவைகாண மாட்டான்.

4. المخالفة للحوادث : الله لا يشبه المخلوقات .

4. படைப்புக்கு மாற்றமாயிருத்தல் : அல்லாஹ் படைப்புகளுக்கு மாற்றமானவன்.

5. القدم : الله لا بداية لوجوده .

5. ஆரம்பமில்லாதிருத்தல் : அல்லாஹ் அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமின்றி உள்ளான்.

6. البقاء : الله لا نهاية لوجوده لا يفنى ولا يموت .

6. முடிவின்றிருத்தல் : அல்லாஹ் அவனது உள்ளமைக்கு எவ்வித முடிவுமின்றி உள்ளான். அவன் அழியவும்மாட்டான், மரணிக்கவும் மாட்டான்.

7. القدرة : الله قادر على كل شئ .

7. வல்லமை : அல்லாஹ் சீரான பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய அனைத்து வஸ்துக்கள் மீதும் வல்லமையுடையவன்.

8. الإرادة : أي المشيئة فكل شئ يحصل بإرادة الله أي مشيئته .

8. நாட்டம் : அனைத்து விடயங்களும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறும்.

9. السمع : الله يسمع بدون أذن ولا ءالة أخرى .

9. கேட்டல் : அல்லாஹ் காதுகளும் எவ்வித கருவியுமின்றி கேட்பவன்.

10. البصر : الله يرى بدون حدقة ولا ءالة أخرى .

10. பார்த்தல் : அல்லாஹ் கண்விழிகளும் எவ்வித கருவிகளுமின்றி பார்ப்பவன்.

11. الكلام : الله يتكلم بدون لسان ولا شفتين ’ وكلامه ليس لغة عربية ولا غيرها ’ ولا يشبه كلامنا .

11. பேசுதல் : அல்லாஹ் நாவோ இரு உதடுகளோ இன்றி பேசுபவன். அவனது பேச்சு அறபு பாஷையாகவோ அது அல்லாத ஏனைய பாஷையாகவோ இல்லை. அவனது பேச்சு எங்களது பேச்சுக்கு மாற்றமானது.

12. الحياة : الله حي وحياته بدون روح ولحم وقلب وهو حي لا يموت .

12. மரணமில்லாதிருத்தல் : அல்லாஹ் மரணமில்லாதவன் அவனது மரணமில்லாத தன்மைக்கு உயிர் தன்மையோ, சடத்தன்மையோ, உள்ளமோ இல்லை.

13. العلم : الله يعلم كل الأشياء قبل حصولها من دون معلم .

13. அறிவு : அல்லாஹ் உலகில் உள்ள அனைத்து விடயங்களும் உண்டாகுவதற்கு முன்பே எந்தவொரு ஆசானின் உதவியுமின்றி அவைகளை நன்கறிந்தவன்.

دعاء

اللهم يا مقلب القلوب ثبت قلبي على دين الإسلام .

பாடம் : 6 الدرس : 6

## دعوة الرسول ﷺ

# ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அழைப்பு (த..வா) பிரச்சாரம்

دعا سيدنا محمد ﷺ الناس إلى عبادة الله وترك عبادة الأوثان .

எங்கள் தலைவர் முஹம்மத் ஸலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வை வணங்குவதற்கும் சிலை வணக்கத்தை விட்டு விடுவதற்கும் மக்களை அழைத்தார்கள்.

قال لهم : قولوا لا إله إلا الله محمد رسول الله ' وعلمهم : أن الإيمان أفضل الأعمال.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் لا إله إلا الله محمد رسول الله என்ற கலிமாவைக் கூறி இஸ்லாத்துக்கு நுழையுமாறு மக்களுக்கு கூறினார்கள்.

நிச்சயமாக நம்பிக்கை (ஈமான்) கொள்வது மிக சிறந்த அமலாகும்.

وأن من مات على الإيمان لا بد أن يدخل الجنة .

யார் மு..மினாக மரணிக்கின்றாரோ நிச்சயமாக அவர் சுவர்க்கம் நுழைவார்.

وأن الإسلام دين جميع الأنبياء .

இஸ்லாம் மார்க்கம் நிச்சயமாக அனைத்து நபிமார்களின் மார்க்கமாகும்.

وأن أكبر ذنب هو الكفر.

நிச்சயமாக பாவங்களில் மிகப்பெரியது குப்ராகும்.

وأن من مات على الكفر دخل النار خالدا فيها .

யார் காபிராக மரணிக்கின்றாரோ நிச்சயமாக அவர் நரகத்தில் நுழைந்து அதில் நிரந்தரமாக இருப்பார் என்று முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மக்களுக்கு கற்றுக்கொடுத்தார்கள்.

أسئلة

1. إلى ما دعا سيدنا محمد ﷺ ؟
2. ماذا قال لهم ؟
3. ماهو أفضل الأعمال ؟ وماهو أكبر ذنب ؟
4. من هو الذي يدخل الجنة ؟ ومن يخلد في النار ؟

பாடம் : 7 الدرس : 7

## أكبر الذنوب

## பாவங்களில் மிகப்பெரியது

قال الله تعالى :

إن الله لا يغفر أن يشرك به ويغفر ما دون ذلك لمن يشاء

سورة النساء ءاية 48

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :

விளக்கம் :

**“நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு இணைவைத்த குற்றச் செயலுடன் மரணித்த எவரையும் மன்னிக்கமாட்டான். குப்ர் ( கொள்கை மறுப்பு ) ஷிர்க் ( இணை வைப்பு ) ஆகிய குற்றமின்றி வேறு ஏதாவது குற்றச் செயலுடன் மரணிப்போரில் தான் நாடிய சிலருக்கு மன்னிப்பளிப்பான்.”**
**(அத்தியாயம் : அந்-நிஸாஉ வசனம் : 48)**

الكفر هو نقيض الإيمان ’ وهو الذنب الذي لا يغفره الله لمن مات عليه .

குப்ர் என்பது ஈமானுக்கு முரணானது.

யார் அந்த பாவத்தின் மீது மரணிக்கின்றாரோ அவரை அல்லாஹ் மன்னிக்கமாட்டான்.

والكفر ثلاثة أنواع : الكفر الاعتقادي _ والكفرالفعلي – والكفر القولي ( ويسمى أيضا الكفر اللفظي ).

**குப்ர் மூன்று வகைப்படும்.**

நம்பிக்கை சார்ந்த குப்ர், செயல் சார்ந்த குப்ர், சொல் சார்ந்த குப்ர்.

الكفر الاعتقادي : كالذي يعتقد أن الله ساكن في السماء أو جالس على العرش أو أنه روح أو ضوء أو أن له شكلا وصورة أو يشبه شيئا من خلقه .

***நம்பிக்கை சார்ந்த குப்ர்***

**அதற்கு உதாரணம்** :- அல்லாஹ் வானத்தில் வசிக்கின்றான் அல்லது அல்லாஹ் அர்ஷில் அமர்ந்திருக்கின்றான் அல்லது அவன் ரூஹ் அல்லது அவன் ஒளி அல்லது அவனுக்கு தோற்றம், வடிவம் இருக்கின்றது அல்லது அவன் படைப்பினங்களில் ஏதாவது ஒன்றுக்கு ஒப்பாகின்றான் என்பதாக உள்ளத்தால் உறுதி கொள்வதாகும்.

الكفر الفعلي : كالذي يرمي المصحف في القاذورات أو يدوس عليه .

***செயல் சார்ந்த குப்ர்.***

**அதற்கு உதாரணம்** :- அல்-குர்ஆனை குப்பையில் வீசுவது அல்லது அதனை காலினால் மிதிப்பது போன்ற செயல்களாகும்.

الكفراللفظي : كالذي يسب الله أو ملكا من الملائكة كعزرائيل أو نبيا من الأنبياء كمحمد أو عيسى أو دين الإسلام .

***சொல் சார்ந்த குப்ர்.***

**அதற்கு உதாரணம்:-**

அல்லாஹ்வை அல்லது அஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் போன்ற அவனுடைய மலக்குமார்களில் ஒருவரை அல்லது முஹம்மத் அலைஹிஸ்ஸலாம், ஈஸா அலைஹிஸ்ஸலாம் போன்ற நபிமார்களில் ஒருவரை அல்லது இஸ்லாம் மார்க்கத்தை ஏசுவதாகும்.

أسئلة

1. ماهو الذنب الذي لا يغفره الله لمن مات عليه ؟
2. كم نوعا الكفر ؟ عددها .
3. أعط مثالا عن كل نوع منها .

பாடம் : 8 الدرس : 8

## الإسلام دين الأنبياء

### இஸ்லாம்தான் அனைத்து நபிமார்களின் மார்க்கமாகும்

قال الله تعالى : إن الدين عند الله الإسلام

سورة آل عمران \ ءاية 19

அல்லாஹ் கூறியுள்ளான்:-

விளக்கம் :

**“நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமாகும்.”**

**(அத்தியாயம் : ஆல இம்றான் வசனம் : 19)**

الإسلام هو الدين الذي رضيه الله لعباده وأمرنا باتباعه .

அல்லாஹ் அடியார்களுக்கு பொருந்திக் கொண்ட மார்க்கமே இஸ்லாமாகும். அதனையே ஏற்றுப் பின்பற்றுமாறு மனிதர்களுக்கு கட்டளையிட்டுள்ளான்.

الإسلام هودين جميع الأنبياء عليهم الصلاة والسلام .

இஸ்லாம் அல்லாஹ்வினால் அவனது அடியார்களுக்கு பொருந்திக்கொள்ளப்பட்ட மார்க்கமாகும். மேலும் அதனை பின்பற்றுமாறும் எங்களுக்கு அவன் ஏவியுள்ளான்.

الأنبياء كلهم مسلمون مؤمنون بالله ’ أولهم سيدنا ءادم وءاخرهم سيدنا محمد عليهم الصلاة والسلام .

அனைத்து நபிமார்களும் அல்லாஹ்வை ஏற்றுக்கொண்ட மு.ஃ.மினான அடியார்களாகும்.

அவர்களில் முதன்மையானவர் எங்கள் தலைவர் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஆவார்கள்.

அவர்களில் இறுதியானவர் எங்கள் தலைவர் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்கள்.

كل الأنبياء كانوا يعبدون الله وحده ولا يشركون به شيئا .

அனைத்து நபிமார்களும் அல்லாஹ்வை மாத்திரம் வணங்கி வழிபடக் கூடியவர்களாகவும், அவனுக்கு எதையும் இணைவைக்காதவர்களாகவும் இருந்தார்கள்.

الأنبياء علموا الناس أن يقولوا : لا إله إلا الله

அனைத்து நபிமார்களும் **“லா இலாஹ இல்லல்லாஹ்”** என்ற கலிமாவை கூறுமாறு மக்களுக்கு கற்றுக்கொடுத்தார்கள்.

أسئلة

1. ماهو الدين الذي رضيه الله لعباده ؟
2. اذكر الآية القرءانية التي تدل على ذلك .
3. من هو أول الأنبياء ؟ ومن هو ءاخرهم ؟
4. ماذا علم كل الأنبياء أن يقولوا ؟

பாடம் : 9 الدرس : 9

# صفات الأنبياء عليهم السلام

## நபிமார்களின் பண்புகள்

قال الله تعالى عن الأنبياء :

وكل فضلنا على العالمين

سورة الأنعام \ءاية 86

அல்லாஹ் அல் குர்ஆனில் நபிமார்களை பற்றி பின்வருமாறு கூறியுள்ளான் :

விளக்கம் :

**“ நாம் அனைத்து நபிமார்களையும் படைப்பினங்களை விட சிறப்பாக்கியுள்ளோம். ”**

(அத்தியாயம் : அல் அன்ஆம் வசனம் : 86)

الأنبياء هو أفضل مخلوقات الله ’ أفضل من الملائكة ومن سائر البشر والجن ’

நபிமார்கள் அல்லாஹ் படைத்த படைப்பினங்களில் மிகச் சிறந்தவர்களாவார்கள். அவர்கள் மலக்குமார்களை விடவும் ஏனைய மனித ஜின் இனங்களை விடவும் மிகச்சிறந்தவர்கள்.

اصطفاهم الله من بين البشر الذكور ’ ليبلغوا الناس أحكام الشرائع ويعلموهم دين الإسلام الذي رضيه الله لعباده ’ وحرم عليهم كل دين سواه .

மனிதர்ளுக்கு மார்க்க சட்டங்களை எத்திவைப்பதற்காகவும், மேலும் அல்லாஹ்வினால் அடியார்களுக்கு பொருந்திக்கொள்ளப்பட்ட மார்க்கமாகிய இஸ்லாத்தை கற்பிப்பதற்காகவும் ஆண்களிலிருந்து அவர்களை தூதர்களாக அல்லாஹ் தேர்ந்தெடுத்தான்.

وأفضل هؤلاء الأنبياء خمسة ويسمون بأولي العزم وهم : محمد وإبراهيم وموسى وعيسى ونوح صلى الله عليهم وسلم أجمعين .

அல்லாஹ் அவர்களது சமுதாயத்துக்கு இஸ்லாம் அல்லாத ஏனைய மார்க்கங்களைப் பின்பற்றுவதைத் தடை செய்துள்ளான்.

நபிமார்களில் மிகச்சிறந்தவர்கள் ‘‘உலுல் அஸ்ம்’’ என்று அழைக்கப்படக் கூடிய ஐந்து நபிமார்களாவார்கள்.

அவர்கள் நபி முஹம்மத், நபி இப்றாஹீம், நபி மூஸா, நபி ஈஸா, நபி நூஹ் அலைஹிமுஸ்ஸலாம் ஆவார்கள்.

وكل نبي موصوف : بالصدق والأمانة وشدة الذكاء والشجاعة والعفة والتبليغ _ أي تبليغ ما أمرهم الله بتبليغه من غير تقصير أو تغيير .

அனைத்து நபிமார்களும் உண்மை, நேர்மை, புத்திக்கூர்மை, வீரம், பத்தினித்தனம், எத்திவைத்தல் அதாவது அல்லாஹ் அவர்களுக்கு எவற்றை எத்திவைக்குமாறு ஏவினானோ அவற்றை எவ்வித குறைபாடுகளும், மாற்றங்களுமின்றி எத்திவைத்தல் போன்ற பண்புகளைக் கொண்டு வர்ணிக்கப்படுவார்கள்.

أسئلة

1. من هم أفضل مخلوقات الله ؟ اذكر الآية التي تدل على ذلك .
2. ممن اصطفى الله الأنبياء ؟
3. لم بعث الأنبياء ؟
4. من هم أولوالعزم ؟
5. اذكر بعض ما يوصف به كل نبي .

பாடம் : 10 الدرس : 10

## الملائكة الكرام

## சங்கையான மலக்குமார்கள்

خلق الله الملائكة من نور وجعل لهم أجنحة .

அல்லாஹ் மலக்குமார்களை ஒளியினால் படைத்து அவர்களுக்கு இறக்கைகளையும் வழங்கியுள்ளான்.

ليسوا ذكورا ولا إناثا.

அவர்கள் ஆண்களுமல்ல, பெண்களுமல்ல.

وهم عباد لله طائعون '

அவர்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்படக்கூடிய அடியார்களாவார்கள்.

لا يعصون الله ما أمرهم ' ويفعلون ما يؤمرون .

அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஒரு போதும் மாறு செய்ய மாட்டார்கள். அல்லாஹ்வினால் எதை செய்யுமாறு ஏவப்பட்டார்களோ அதை மாத்திரமே செய்வார்கள்.

لا يأكلون ولا يشربون '

அவர்கள் உண்ணவும் மாட்டார்கள் பருகவும் மாட்டாார்கள்.

الملائكة لا يتوالدون '

அவர்கள் பிள்ளை பெற்றெடுக்க மாட்டார்கள்.

ولا ينامون ولا يتعبون ' وعددهم كبير جدا .

அவர்கள் உறங்கவும் மாட்டார்கள். களைப்படையவும் மாட்டார்கள்.

அவர்கள் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள்.

المسلم يحب الملائكة ولا يستخف بهم

ஒரு முஸ்லிம் மலக்குமார்களை நேசிப்பான். அவர்களை இழிவாக கருத மாட்டான்.

ذكر

يقال صباحا ومساء ثلاث مرات

காலையிலும் மாலையிலும் மூன்று விடுத்தம் ஓதப்படும்.

بسم الله الذي لا يضر مع اسمه شئ في الأرض ولا في السماء وهو السميع العليم .

أسئلة

1. من خلق الله الملائكة ؟
2. من هم الملائكة ؟

பாடம் : 11 الدرس : 11

## الكتب السماوية

### (வானவேதங்கள்) அதாவது வானத்திலிருந்து இறக்கப்பட்ட வேதங்கள்

الكتب السماوية كتب أنزلها الله على بعض الأنبياء كلها تأمر بدين الإسلام .

அல்லாஹ் சில நபிமார்களுக்கு வானவேதங்களை இறக்கிவைத்துள்ளான். அவ்வேதங்கள் அனைத்தும் இஸ்லாம் மார்க்கத்தை மாத்திரமே பின்பற்றுமாறு கட்டளையிடுகின்றன.

وهي كثيرة أشهرها أربعة :

அவைகள் அதிகமானவைகள்.

அவைகளில் மிகப்பிரபல்யமானவை நான்கு வேதங்களாகும்.

1- القرءان : أنزل على سيدنا محمد ( ﷺ وعلى سائر إخوانه النبيين ).
وهو باللغة العربية .

அவையாவன:- 1- அல்-குர்ஆன் :- அல்-குர்ஆன் எங்கள் தலைவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறபு மொழியில் இறக்கிவைக்கப்பட்டுள்ளது.

2- الإنجيل : أنزل على سيدنا عيسى .
وهو باللغة السريانية .

அல்-இன்ஜீல் :- அல்-இன்ஜீல் எங்கள் தலைவர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுர்யானிய மொழியில் இறக்கிவைக்கப்பட்டுள்ளது.

3- التوراة : أنزل على سيدنا موسى .
وهو باللغة العبرانية .

அத்-தவ்றாத் :- அத்-தவ்றாத் எங்கள் தலைவர் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அபறானிய மொழியில் இறக்கிவைக்கப்பட்டுள்ளது.

4- الزبور : أنزل عل سيدنا داود .
وهو باللغة العبرانية .

அஸ்-ஸபூர் :- அஸ்-ஸபூர் எங்கள் தலைவர் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அபறானிய மொழியில் இறக்கிவைக்கப்பட்டுள்ளது.

أنا مسلم أؤمن بكل الكتب السماوية .

நான் அனைத்து வானவேதங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முஸ்லிமாகும்.

أسئلة

1. ما هي الكتب السماوية ؟
2. بم تأمر الكتب السماوية ؟
3. عدد بعض الكتب السماوية .
4. على من أنزل القرءان ؟ والإنجيل ؟ والتوراة ؟ والزبور ؟

# فصل العبادات

# வணக்க வழிபாடுகள் பற்றிய விபரம்

**பாடம் : 1** **الدرس : 1**

## فروض الوضوء
## வுழூவின் பர்ளுகள்

من شروط الصلاة الوضوء

وله فروض وسنن وفروضه ستة وهي :

வுழூ செய்வது தொழுகையின் நிபந்தனைகளில் ஒன்றாகும். வுழூவுக்கு பர்ளுகளும் ஸுன்னத்துக்களும் உள்ளன.
வுழூவின் பர்ளுகள் ஆறாகும்.
அவையாவன :

1. النية بالقلب عند غسل الوجه .

1. முகத்தை கழுவும் போது உள்ளத்தினால் நிய்யத் வைத்தல்.

2. غسل الوجه كله من الأذن إلى الأذن عرضا ومن منابت شعر الرأس عادة إلى الذقن .

2. முகத்தை அகலத்தால் ஒரு காதிலிருந்து மறு காது வரையிலும் நீளத்தால் வழமையில் தலைமுடி முளைக்கும் பகுதியிலிருந்து நாடிக்குழி வரையிலும் பரிபூரணமாக கழுவுதல்.

3. غسل اليدين مع المرفقين .

3. இரு கைகளையும் முழங்கை உட்பட கழுவுதல்.

4. مسح بعض الرأس .

4. தலையின் சில பகுதியை தண்ணீரால் தடவுதல்.

5. غسل الرجلين مع الكعبين .

5. கால்களையும் கரண்டைக்கால் உட்பட கழுவுதல்.

6. وترتيب الفروض هكذا .

6. மேற்கூறப்பட்ட பிரகாரம் ஒழுங்கு முறைப்படி செய்தல்.

أسئلة

1. عدد فروض الوضوء

**பாடம் : 2** **الدرس : 2**

## الوضوء فروضه وسننه

## வுழூவின் பர்ளுகளும் ஸுன்னத்துக்களும்

الفروض ما لا يصح الوضوء بدونها أما السنن فيصح الوضوء بدونها لكن إذا تركها المسلم فاته ثوابها .

பர்ளுகள் இவற்றை செய்யாமல் வுழூ நிறைவேறமாட்டாது.

ஸுன்னத்துக்கள் : இவைகள் விடுபட்டாலும் வுழூ நிறைவேறும். ஆனால் இதனை விடுவதன் மூலம் ஸுன்னத்தின் நன்மை தவறிவிடும்.

أبدأ وضوئي:

நான் எனது வுழூவை பின்வருமாறு ஆரம்பம் செய்வேன்.

1. بالتسمية وأغسل كفي ثلاث مرات ( هذا سنة )

1 . பிஸ்மில்லாஹ் சொல்லி எனது இரு கைகளையும் மூன்று தடவைகள் கழுவுவேன். ( இது ஸுன்னத்தாகும். )

2. ثم أتمضمض ثلاث مرات (هذا سنة )

2 . பின்பு மூன்று தடவைகள் வாய் கொப்பளிப்பேன். ( இது ஸுன்னத்தாகும்.)

3. ثم أستنشق ثلاث مرات (هذا سنة )

3 . பின்பு மூன்று தடவைகள் நாசிக்கு தண்ணீர் செலுத்துவேன். ( இது ஸுன்னத்தாகும். )

4. ثم أنوي بقلبي عند غسل الوجه فأقول : نويت الوضوء ( هذا فرض )

4. பின்பு முகம் கழுவும் போது உள்ளத்தால் வுழூவின் கடமைகளை நிறைவேற்றுகிறேன். என்று நிய்யத்து வைப்பேன். ( இது பர்ளாகும்.)

5. ثم أغسل وجهي ثلاث مرات من منابت شعر الرأس إلى الذقن ومن الأذن إلى الأذن ( غسل الوجه مرة فرض )

5. பின்பு எனது முகத்தை அகலத்தால் ஒரு காதிலிருந்து மறு காது வரையிலும் நீளத்தால் வழமையில் தலைமுடி முளைக்கும் இடத்திலிருந்து நாடிக்குழி வரையிலும் பரிபூரணமாக மூன்று தடவைகள் கழுவுவேன். ( முகத்தை ஒரு தடவை கழுவுவது பர்ளாகும். )

6. ثم أغسل يدي مع المرفقين اليمنى قبل اليسرى ثلاث مرات وأخلل أصابع يدي ( غسل اليدين مرة فرض )

6 . பின்பு எனது இரு கைகளையும் முழங்கை உட்பட வலதை இடதிற்கு முன்னர் மூன்று தடைவகள் கழுவுவேன். மேலும் எனது இரு கைகளின் விரல்களை கோதிக் கழுவுவேன். ( இரு கைகளையும் ஒரு தடவை கழுவுவது பர்ளாகும். )

7. ثم أمسح جميع رأسي ثلاث مرات ( مسح بعض الرأس مرة فرض )

7 . பின்பு எனது தலையின் அனைத்து பகுதிகளையும் மூன்று தடவைகள் தண்ணீரால் நான் தடவுவேன். ( தலையின் சில பகுதியை ஒரு தடவை தண்ணீரால் தடவுவது பர்ளாகும். )

8. ثم أمسح أذني ظاهرهما وباطنهما ثلاث مرات ( وهذا سنة )

8 . பின்பு எனது காதுகளின் உட்பகுதி மற்றும் வெளிப்பகுதியை மூன்று தடவைகள் தண்ணீரால் தடவுவேன். ( இது ஸுன்னத்தாகும். )

9. ثم أغسل رجلي مع الكعبين اليمنى قبل اليسرى ثلاث مرات وأخلل أصابع رجلي ( غسل الرجلين مرة فرض )

9 . பின்பு எனது இரு கால்களையும் கரண்டைக்கால் உட்பட வலதை இடதிற்கு முன்னர் மூன்று தடவைகள் கழுவுவேன். மேலும் எனது இரு கால்களின் விரல்களையும் கோதிக் கழுவுவேன். ( இரு கால்களை ஒரு தடவை கழுவுவது பர்ளாகும். )

10. وأرتب الوضوء بحسب هذه الطريقة ( الترتيب في الوضوء فرض )

10 . மேற்கூறப்பட்ட பிரகாரம் வுழூவை ஒழுங்கு முறைப்படி செய்வேன். ( இவ்வாறு ஒழுங்கு முறைப்படி செய்வது பர்ளாகும். )

وبعد الانتهاء من الوضوء أقول :

வுழூ செய்த பின் பின்வருவாறு நான் கூறுவேன். (இது ஸுன்னத்தாகும்)

أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله’

اللهم اجعلني من التوابين ’ واجعلني من المتطهرين ( وهذا سنة )

**பாடம் : 3** **الدرس : 3**

## نواقض الوضوء

## வுழூவை முறிக்கும் விடயங்கள்

نواقض الوضوء هي الأشياء التي تفسد الوضوء وتبطله ’ منها :

வுழூவை முறிக்கும் விடயங்கள் பல இருக்கின்றன.

அவைகளில் சில :-

1. خروج البول أوالغائط أو الريح

1 . சிறுநீர் அல்லது மலம் அல்லது காற்று வெளியேறுதல்.

2. النوم على البطن أو الظهر أو الجنب الأيمن أو الجنب الأيسر .

2 . வயிறு அல்லது முதுகு அல்லது வலது விலா அல்லது இடது விலா எழும்பின் மீது தூங்குதல்.

3. الجنون والإغماء .

3 . பைத்தியம் அல்லது மயக்கம் ஏற்படுதல்.

4. فمن انتقض وضوءه فلا يجوز له أن يصلي حتى يتوضأ من جديد .

4 . எனவே யாருக்கு வுழூ முறிந்துவிட்டதோ அவர் புதிதாக வுழூ செய்கின்ற வரைக்கும் தொழுவது கூடாது.

أسئلة

1. ماهي نواقض الوضوء ؟
2. عدد بعض نواقض الوضوء .

பாடம் : 4 الدرس : 4

## الاستنجاء

## மலசலத்தை விட்டும் சுத்தம் செய்தல்

إذا خرج من المرء بول فإنه ينتظر انقطاعه ثم يستنجي ’ أي يصب الماء الطاهر المطهر ليطهر محل الخروج . فإذا زالت النجاسة ’ صار المحل طاهرا .

ஒருவருக்கு சிறு நீர் வெளியேறிவிட்டால் அவர் அது முழுமையாக வெளியேறும் வரை காத்திருந்து பின் சுத்தம் செய்வார்.

அதாவது சுத்தமான பிறரை சுத்தப்படுத்தக்கூடிய தண்ணீரை சிறுநீர் வெளியேறிய இடத்தை சுத்தம் செய்வதற்காக அதன் மீது ஊற்றுவார். எனவே நஜீஸ் நீங்கிவிட்டால் அந்த இடம் சுத்தமாக மாறிவிடும்.

وكذلك إذا خرج منه غائط يصب الماء بيده اليمنى على محل الخروج ويدلك المحل بيده اليسرى ’ فإذا زالت النجاسة صار المحل طاهرا .

அதே போன்று ஒருவருக்கு மலம் வெளியேறிவிட்டால் அவர் தனது வலது கரத்தினால் நஜீஸ் வெளியேறிய இடத்தில் தண்ணீரை ஊற்றி இடது கரத்தினால் அதனை தேய்த்து கழுவுவார். எனவே நஜீஸ் நீங்கிவிட்டால் அந்த இடம் சுத்தமாக மாறிவிடும்.

دعاء الدخول إلى الخلاء :

மலசல கூடத்திற்கு நுழையும் போது ஓதும் துஆ

بسم الله اللهم إني أعوذ بك من الخبث والخبائث .

دعاء الخروج من الخلاء :

மலசல கூடத்தை விட்டும் வெளியேறும் போது ஓதும் துஆ

الحمد لله الذي أذهب عني الأذى وعافاني .

أسئلة

1. كيف يكون الاستنجاء من البول ؟
2. كيف يكون الاستنجاء من الغائط ؟
3. ماذا نقول عند الدخول إلى الخلاء ؟ وعند الخروج ؟

பாடம் : 5 الدرس : 5

## الصلوات الخمس

## ஐங்கால தொழுகைகள்

قال الله تعالى

إن الصلوات كانت على المؤمنين كتابا موقوتا - سورة النساء ءاية 103

أي فرضا لها أوأوقاتها .

அல்லாஹ் கூறியுள்ளான்.

**“நிச்சயமாக தொழுகை மு.ஃ.மின்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாகும்.”** (அத்தியாயம் அந் நிஸாஉ வசனம் : 103)

والصلوات المفروضات خمس وهي :

பர்ளான தொழுகைகள் ஐந்தாகும்.

அவையாவன :

1. صلاة الصبح : ركعتان .

1 . சுப்ஹ் தொழுகை : அது இரண்டு ரக்அத்கள் கொண்டதாகும்.

2. صلاة الظهر : أربع ركعات .

2. ளுஹ்ர் தொழுகை : அது நான்கு ரக்அத்கள் கொண்டதாகும்.

3. صلاة العصر : أربع ركعات .

3 . அஸ்ர் தொழுகை : அது நான்கு ரக்அத்கள் கொண்டதாகும்.

4. صلاة المغرب : ثلاث ركعات .

4 . மஹ்ரிப் தொழுகை : அது மூன்று ரக்அத்கள் கொண்டதாகும்.

.5 صلاة العشاء : أربع ركعات .

5 . இஷா தொழுகை : அது நான்கு ரக்அத்கள் கொண்டதாகும்.

دعاء

اللهم اجعلني مقيم الصلاة

பாடம் : 6 الدرس : 6

## شروط صحة الصلاة

## தொழுகை நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் சில உள்ளன

قبل أداء الصلاة ’ لا بد من شروط يؤتى بها حتى تكون الصلاة صحيحة ’ ومن هذه الشروط :

அந்நிபந்தனைகளில் பின்வருவன உள்ளடங்கும்.

தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அதனை நிறை வேற்ற முன் சில நிபந்தனைகள் இருக்கின்றன. அதனை கவனிப்பது அவசியமாகும்.

1. الإسلام : فلا تصح الصلاة من الكافر .

1 . முஸ்லிமாக இருத்தல் : காபிரான ஒருவரிடமிருந்து தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. والوضوء : فلا تصح الصلاة بدون وضوء .

2 . வுழூ செய்திருத்தல் : வுழூவின்றி தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. وطهارة البدن والثول والمكان عن النجاسة .

3. உடல், ஆடை, இடம் போன்றவைகள் நஜீஸை விட்டும் சுத்தமாக இருத்தல்.

4. ودخول وقت الصلاة : فلا تصح الصلاة قبل دخول وقتها بلا عذر .

4 . தொழுகை நேரம் நுழைந்திருத்தல் : மார்க்க அனுமதியின்றி தொழுகையின் நேரம் நுழைவதற்கு முன் தொழுவது ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

5. واستقبال القبلة : أي أن يتوجه نحو الكعبة الشريفة .

5 . கிப்லாவை முன்னோக்கிருத்தல் : அதாவது சங்கையான க.ஃ.பா இருக்கும் திசையை முன்னோக்கியிருத்தல்.

6. وستر العورة : وعورة الرجل مابين سرته وركبته ’ وعورة المرأة كل جسمها ما عدا وجهها وكفيها .

6 . அவ்றத்தை மறைத்திருத்தல் : ஆணின் அவ்றத் ( மறைக்கவேண்டிய பகுதி ) தொப்புளுக்கும், முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியாகும்.

பெண்ணின் அவ்றத் : முகத்தையும் அவளது இரு மணிக்கட்டுகளையும் தவிர உடலின் அனைத்து பகுதிகளுமாகும்.

பாடம் : 7

الدرس : 7

## مبطلات الصلاة

## தொழுகையை முறிக்கும் விடயங்கள்

تبطل الصلاة بعدة أمور منها :

1. أن يتكلم المصلي عامدا بكلام الناس بحرفين أو أكثر أو بحرف له معنى .

1. தொழுபவர் மனமுரண்டாக ( குர்ஆன் அல்லாத திக்ர் அல்லாத ) மனிதர்கள் பேசும் பொதுவான பேச்சை பேசுவதாகும். அப்பேச்சானது இரு எழுத்துடையதாகவோ அல்லது பல எழுத்துடையதாகவோ அல்லது பொருள் தரும் ஒரு எழுத்துடையதாகவோ இருப்பினும் சரியே.

2. وأن يأكل أو يشرب عامدا ' ولو قليلا .

2. மனமுரண்டாக சாப்பிடுதல் அல்லது குடித்தல். அவ்விரண்டும் குறைவாக இருந்தாலும் சரியே.

3. والفعل الكثير .

3. அதிகமாக செயல்களை செய்தல்.

4. وأن يفعل حركة واحدة للعب ' كتحريك اللسان أو الإصبع بنية اللعب .

4. விளையாட்டு நோக்குடன் ஒரு அசைவை செய்தல். அதற்கு உதாரணம் நாவை அல்லது விரலை விளையாட்டு நோக்குடன் அசைத்தல்.

5. وأن ينتقض وضوءه بنحو خروج ريح أو بول .

5. காற்று அல்லது சிறு நீர் வெளியேறுதல் போன்ற விடயங்களின் மூலம் வுழூ முறிதல்.

## دعاء

اللهم اجعل في قبري نورا وفي لساني نورا واجعل في بصري نورا .

பாடம் : 8 الدرس : 8

## من أدعية الصلاة 1

**1. دعاء الافتتاح** : ( يقرأ هذا الدعاء بعد تكبيرة الإحرام وقبل قراءة الفاتحة).

**துஆஉல் இப்திதாஹ் :**
இஹ்ராமுடைய தக்பீர் கூறி பாதிஹா சூறா ஆரம்பிக்க முன் ஓதும் துஆ

وجهت وجهي للذي فطر السموات والأرض حنيفا مسلما وما أنا من المشركين إن صلاتي ونسكي ومحياي ومماتي لله رب العالمين لا شريك له وبذلك أمرت وأنا من المسلمين .

**2. دعاء القنوت** : ( يقرأ هذا الدعاء في اعتدال الركعة الثانية وقبل السجود في صلاة الصبح ) .

**துஆஉல் குனூத் :**
சுப்ஹ் தொழுகையில் இரண்டாவது ரக்அத்தின் ஸுஜூதுக்கு முன்னால் உள்ள இஃதிதாலில் ஓதும் துஆ.

اللهم اهدني فيمن هديت ’ وعافني فيمن عافيت ’ وتولني فيمن تولت ’ وبارك لي فيما أعطيت ’ وقني شر ما قضيت ’ فإنك تقضي ولا يقضى عليك ’ وإنه لا يذل من واليت ’ ولا يعز من عاديت ’ تباركت وتعاليت ’ فلك الحمد على ما قضيت ’ أستغفرك اللهم وأتوب إليك . ثم نقول بعده وصل اللهم على سيدنا محمد وعلى ءاله وصحبه وسلم .

பாடம் : 9 الدرس : 9

## من أدعية الصلاة ( 2 )

**1. التشهد** : ( يقرأ هذا في الركعة الثانية والركعة الأخيرة في الجلوس بعد السجود الثاني )

**1 . தஷஹ்ஹுத் :**

இரண்டாவது ரக்அத்திலும். இறுதி ரக்அத்திலும் இரண்டாவது ஸுஜூதுக்கு பின்னால் உள்ள இருப்பில் ஓதும் துஆ

التحيات المباركات الصلوات الطيبات لله ’ السلام عليك أيها النبي ورحمة الله وبركاته ’ السلام علينا وعلى عباد الله الصالحين ’ أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا رسول الله .

**2. الصلاة الإبراهيمية** : ( تقرأ بعد الانتهاء من التشهد الأخير ) وهي :

**2. ஸலாதுல் இப்றாஹீமிய்யஹ் :**

இறுதி தஷஹ்ஹுதை முடித்ததன் பின்னால் ஓதும் துஆ

اللهم صل على محمد وعلى ءال محمد ’ كما صليت على إبراهيم وعلى ءال إبراهيم إنك حميد مجيد .

اللهم بارك على محمد وعلى ءال محمد ’ كما باركت على إبراهيم وعلى ءال إبراهيم إنك حميد مجيد .

**3 دعاء ءاخر الصلاة :**

( يقرأ بعد الانتهاء من الصلاة الإبراهيمية وقبل التسليم ) .

3- இறுதி பகுதியில் ஓதும் துஆ

(அதாவது ஸலாதுல் இப்றாஹீமிய்யஹ்வை ஓதி ஸலாம் கொடுப்பதற்கு முன்னால் ஓதும் துஆ)

ربنا ءاتنا في الدنيا حسنة وفي الآخرة حسنة ' وقنا عذاب النار ' ربنا لا تزغ قلوبنا بعد إذ هديتنا ' وهب لنا من لدنك رحمة أنك أنا الوهاب .

**4- دعاء آخر الصلاة**

4- தொழுகைக்கு பின்னால் ஓதும் துஆ

اللهم أعنى على ذكرك وشكرك وحسن عبادتك
سبحان الله والحمد لله ولا إله إلا الله والله أكبر .

பாடம் : 10 الدرس : 10

## كيف أصلي الصبح
## நான் ஸுப்ஹ் தொழுகையை எப்படி தொழுவேன்?

إذا قمت إلى الصلاة الصبح أفعل ما يأتي :

நான் ஸுப்ஹ் தொழுகைக்கு நின்றால் பின்வரும் விடயங்களை செய்வேன்.

1. أتوجه إلى الكعبة الشريفة وأنوي فأقول بقلبي :( أصلي فرض الصبح لله تعالى ) وأقول : الله أكبر ( وتسمى تكبيرة الإحرام )

1 . சங்கையான கிப்லாவை முன்னோக்கி உள்ளத்தினால் ''உஸல்லி பர்ளஸ் ஸுப்ஹி லில்லாஹி தஆலா'' என்று கூறுவேன். மேலும் ''அல்லாஹு அக்பர்'' என்று கூறுவேன். (அதற்கு தக்பீரதுல் இஹ்ராம் என்று சொல்லப்படும்.)

2. ثم أضع اليد اليمنى فوق اليسرى تحت الصدر وفوق السرة ' وأقرأ سرا دعاء الافتتاح ثم أقرأ جهرا الفاتحة وشيئا من القراءان ولو سورة قصيرة .

2 . எனது வலது கையை இடது கைக்கு மேல் வைத்து அவ்விரண்டையும் நெஞ்சுக்கு கீழாலும் தொப்புளுக்கு மேலாலும் வைப்பேன். மேலும் எனக்கு கேட்கும் படி துஆஉல் இப்திதாஹ்வை ஓதுவேன். பின்பு பாதிஹாவையும் குர்ஆனில் வேறு சில பகுதியையும் அது சிறியதாக இருந்தாலும் சரியே சத்தமாக ஓதுவேன்.

3. ثم أقول ( الله أكبر ) وأركع قائلا في الركوع : ( سبحان ربي العظيم ) ثلاث مرات .

3 . பின்பு ''அல்லாஹு அக்பர்'' என்று கூறுவேன். பின்பு ருகூஉ செய்து அதில் ''ஸுப்ஹான ரப்பியல் அழீம்'' என்று மூன்று தடவைகள் கூறுவேன்.

4. ثم أرفع رأسي من الركوع قائلا: ( سمع الله لمن حمده ) حتى أعتدل فأقول : ربنا ولك الحمد

4 . பின்பு ருகூவிலிருந்து ‘‘ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்’’ என்று கூறியவனாக எனது தலையை உயர்த்துவேன். பின்பு நடுநிலைக்கு வந்து அதில் ‘‘ரப்பனா வலகல் ஹம்து’’ என்று கூறுவேன்.

5. ثم أقول ( الله أكبر ) وأسجد واضعا على الأرض جبهتي وشيئا من بطون كفي وركبتي وشيئا من بطون أصابع رجلي وأقول في السجود ( سبحان ربي الأعلى ) ثلاث مرات

5 . பின்பு ‘‘அல்லாஹு அக்பர்’’ என்று கூறுவேன். மேலும் பூமியில் எனது நெற்றியையும் மணிக்கட்டின் உட்புரத்தையும் முழங்காலின் உட்புரத்தையும் காலின் விரல்களுடைய உட்புரத்தையும் வைப்பேன். மேலும் ஸுஜூதில் ‘‘ஸுப்ஹான ரப்பியல் அ.ஃலா’’ என்று மூன்று தடவைகள் கூறுவேன்.

6. ثم أرفع رأسي من السجود وأنا أقول : الله أكبر فأجلس ’ ثم أسجد مرة ثانية مثل الأولى .

6 . பின்பு ஸுஜூதிலிருந்து எனது தலையை உயர்த்தி அதில் ‘‘அல்லாஹு அக்பர்’’ என்று சொல்லி அமர்வேன். பின்பு முதல் செய்தது போன்று மறுவிடுத்தமும் ஸுஜூத் செய்வேன்.

7. ثم أرفع من السجود وأنا أقول : الله أكبر فأقف وبهذا أكون أتممت ركعة .

7 . பின்பு எனது தலையை உயர்த்தி அதில் ‘‘அல்லாஹு அக்பர்’’ என்று சொல்லி நிற்பேன். இதன் மூலம் முதல் ரக்அத்தை பரிபூரணப்படுத்திவிடுவேன்.

8. ثم أقوم لركعة ثانية فأقرأ الفاتحة وشيئا من القرءان ولو سورة قصيرة جهرا ' ثم أركع وأعتدل وأقرأ دعاء القنوت ثم أسجد .

8 . பின்பு இரண்டாவது ரக்அத்துக்காக எழுந்து அதில் சூறதுல் பாதிஹாவையும் குர்ஆனில் சில பகுதியையும் அது சிறிய சூறாவாக இருந்தாலும் சரியே சத்தமாக ஓதுவேன்.
பின்பு ருகூஉ செய்து நிலைக்கு வந்து அதில் துஆஉல் குனூதை ஓதுவேன். மேலும் ஸுஜூத் செய்வேன்.

9. ثم أجلس بعد السجود الثاني وأقرأ التشهد .

9 . இரண்டாவது ஸுஜூதுக்கு பின்னால் அமர்ந்து தஷஹ்ஹுதை ஓதுவேன்.

10. ثم بعد قرءاة التشهد أقرأ الصلاة الإبراهيمة ودعاء ءاخر الصلاة ثم ألتفت إلى جهة اليمين وأقول : السلام عليكم ورحمة الله ثم ألتفت إلى جهة اليسار وأقول السلام عليكم ورحمة الله وبذلك أكون قد صليت الصبح

10 . பின்பு தஷஹ்ஹுத் ஓதியதன் பின் ஸலாதுல் இப்றாஹீமிய்யஹ்வையும் தொழுகையின் இறுதி துஆவையும் ஓதுவேன் பின்பு வலது திசைக்கு திரும்பி ‘‘அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்’’ என்று சொல்வேன். பின்பு இடது திசைக்கு திரும்பி "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்" என்று சொல்வேன். இதன் மூலம் ஸுப்ஹ் தொழுகையை முடித்துவிட்டேன்.

பாடம் : 11 الدرس : 11

## كيف أصلي الظهر

## ழுஹ்ர் தொழுகையை எப்படி தொழுவேன் ?

أقف مستقبلا القبلة الشريفة وأقول بقلبي : أصلي فرض الظهر وأرفع يدي قائلا الله أكبر

சங்கையான கிப்லாவை முன்னோக்கி ‘‘உஸல்லி பர்ளல் ழுஹ்ரி’’ என்று கூறி ‘‘அல்லாஹு அக்பர்’’ என்று சொன்னவனாக இரு கைகளையும் உயர்த்துவேன்.

ثم أقرأ دعاء الافتتاح .

ثم أقرأ الفاتحة وشيئا من القرءان ولو سورة قصيرة سرا .

சூறதுல் பாதிஹாவையும் குர்ஆனில் சில பகுதியையும் அது சிறியதாக இருந்தாலும் எனக்கு கேட்கும் படி ஓதுவேன்.

ثم أركع وأقول سبحان ربي العظيم ثلاث مرات .

பின்பு ருகூஉ செய்து அதில் ‘‘ஸுப்ஹான ரப்பியல் அழீம்’’ என்று மூன்று தடவைகள் கூறுவேன்.

ثم أرفع من الركوع قائلا سمع الله لمن حمده فإذا اعتدلت قلت : ربنا ولك الحمد .

பின்பு ருகூவிலிருந்து ‘‘ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்’’ என்று சொன்னவனாக நடுநிலைக்கு வந்து அதில் ‘‘ரப்பனா வலகல் ஹம்து’’ என்று கூறுவேன்.

ثم أسجد وأقول سبحان ربي الأعلى ثلا ث مرات .

பின்பு ஸுஜூத் செய்து அதில் ‘‘ஸுப்ஹான ரப்பியல் அஃலா’’ என்று மூன்று தடவைகள் ஓதுவேன்.

ثم أجلس ثم أسجد مرة ثانية وأقول : سبحان ربي الأعلى ثلاث مرات

பின்பு அமர்ந்து இரண்டாவது விடுத்தம் ஸுஜூத் செய்து அதில் ‘‘ஸுப்ஹான ரப்பியல் அ.்.லா’’ என்று மூன்று தடவைகள் கூறுவேன்.

ثم أقوم للركعة الثانية فأفعل كما فعلت في الركعة الأولى من الفاتحة إلى السجود الثاني .

பின்பு இரண்டாவது ரக்அத்துக்காக எழுந்து அதில் முதல் ரக்அத்தில் பாதிஹாவிலிருந்து இரண்டாவது ஸுஜூத் வரை செய்ததை போன்று நான் செய்வேன்.

ثم أقرأ التشهد ثم أقول : اللهم صل على محمد .

பின்பு தஷஹ்ஹுதை ஓதி அதில் ‘‘அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்’’ என்று கூறுவேன்.

ثم أقوم للركعة الثالثة فأقرأ الفاتحة

பின்பு மூன்றாவது ரக்அத்துக்காக எழுந்து அதில் பாதிஹாவை ஓதுவேன்.

ثم أفعل كما فعلت في الر كعة الأولى من الركوع إلى السجود الثاني .

பின்பு முதல் ரக்அத்தில் ருகூவிலிருந்து இரண்டாவது ஸுஜூத் வரை செய்ததை போன்று செய்வேன்.

ثم أقوم للركعة الرابعة فأفعل كما فعلت في الثالثة من قراءة الفاتحة إلى السجود الثاني

பின்பு நான்காவது ரக்அத்துக்காக எழுந்து அதில் மூன்றாவது ரக்அத்தில் பாதிஹா ஓதுவதிலிருந்து இரண்டாவது ஸுஜூத் வரை செய்ததை போன்று நான் செய்வேன்.

ثم أقرأ التشهد والصلاة الإبراهيمية والدعاء ءاخر الصلاة

பின்பு தஷஹ்ஹுதையும் ஸலாதுல் இப்றாஹீமிய்யஹ்வையும் தொழுகையின் இறுதி துஆவையும் ஓதுவேன்.

ثم أنهي صلاتي قائلا : السلام عليكم ورحمة الله .

பின்பு எனது தொழுகையை ‘‘அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்’’ என்று சொன்னவனாக முடித்துக் கொள்வேன்.

பாடம் : 11 الدرس : 11

## كيف أصلي العصر
## நான் அஸ்ர் தொழுகையை எப்படி தொழுவேன்?

أصلي صلاة العصركصلاة الظهر تماما لكن أقول عند النية : أصلي فرض العصر .

நான் அஸ்ர் தொழுகையை ழுஹ்ர் தொழுகை போன்று பரிபூரணமாக தொழுவேன். ஆனால் நிய்யத்துடைய நேரத்தில் ''உஸல்லி பர்ளல் அஸ்ரி'' என்று சொல்வேன்.

دعاء
اللهم أعني على ذكرك وشكرك وحسن عبادتك

பாடம் : 12 الدرس : 12

## كيف أصلي المغرب
## நான் ம.்.ரிப் தொழுகையை எப்படி தொழுவேன்?

أقف مستقبلا القبلة الشريفة وأقول بقلبي : أصلي فرض المغرب وأرفع يدي قائلا الله أكبر .

சங்கையான கிப்லாவை முன்னொக்கி நிற்பேன். அதில் எனது உள்ளத்தால் ‘‘உஸல்லி பர்ளல் ம.்.ரிபி’’ என்று சொல்வேன். மேலும் இரு கைகளையும் ‘‘அல்லாஹு அக்பர்’’ என்று சொன்னவனாக உயர்த்துவேன்.

ثم أفعل في الركعة الأولى والثانية كما فعلت في صلاة الصبح في الركعة الأولى والثانية .

சுப்ஹ் தொழுகையில் செய்ததை போன்று முதல் இரண்டாவது ரக்அத்தில் செய்வேன்.

ثم أجلس وأقرأ التشهد ثم أقول اللهم صل على محمد .

பின்பு அமர்ந்து அதில் தஷஹ்ஹுதை ஓதுவேன்.

ثم أكبر وأقوم للركعة الثالثة فأفعل فيها كما فعلت في غيرها من الركعات لكن لا أقرأ غير الفاتحة في القيام سرا ,

பின்பு தக்பீர் சொல்லி மூன்றாவது ரக்அத்துக்காக எழும்புவேன்.

முதல் இரண்டாவது ரக்அத்தில் செய்ததை போன்று அதில் செய்வேன். ஆனால் பாதிஹாவை மாத்திரம் எனக்கு கேட்கும் படி ஓதுவேன்.

ثم بعد السجود الثاني أجلس وأقرأ التشهد ثم الصلاة الإبراهيمية ’

இரண்டாவது ஸுஜுதுக்கு பின்னால் அமர்ந்து அதில் தஷஹ்ஹுதையும் ஸலாதுல் இப்றாஹீமிய்யஹ்வையும் ஓதுவேன்.

ثم أنهي صلاتي : السلام عليكم مرتين مرة إلى اليمين ومرة إلى اليسار .

ஒரு விடுத்தமும் வலது பக்கமும் மறு விடுத்தம் இடது பக்கமும் “அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்” என்று சொன்னவனாக எனது தொழுகையை முடித்துக்கொள்வேன்.

பாடம் : 13 الدرس : 13

## كيف أصلي العشاء
## இஷா தொழுகையை எப்படி தொழுவேன்?

أصلي صلاة العشاء كصلاة الظهر لكن أقول في النية : أصلي فرض العشاء

இஷா தொழுகையை ழுஹர் தொழுகைபோன்று தொழுவேன். ஆனால் நிய்யத்துடைய நேரத்தில் ‘‘உஸல்லி பர்ளல் இஷாஇ’’ என்று சொல்வேன்.

وأقرأ الفاتحة والسورة بعدها في الركعة الأولى والثانية جهرا .

முதலாவது ரக்அத்திலும் இரண்டாவது ரக்அத்திலும் பாதிஹாவையும் மற்ற சூறாவையும் சத்தமாக ஓதுவேன்.

وأقرأ الفاتحة في الركعة الثالثة والرابعة سرا .

மூன்றாவது ரக்அத்திலும் நான்காவது ரக்அத்திலும் பாதிஹாவை எனக்கு கேட்கும் படி ஓதுவேன்.

பாடம் : 14 الدرس : 14

## الصيام
## நோன்பு

الصيام عبادة عظيمة وأمر من أعظم أمور الإسلام ’ فرض الله تعالى صيام شهر رمضان ’ على كل مسلم بالغ عاقل قادر على الصوم .

நோன்பு ஒரு மகத்தான வணக்கமாகும். மேலும் அது இஸ்லாத்தின் ஐம்பெரும் விடயங்களிலும் ஒன்றாகும். நோன்பு நோற்பதற்கு சக்தியுள்ள, புத்தியுள்ள, பருவத்தை எத்திய ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் றமழான் மாதம் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்.

والصيام لا بد فيه من النية ’ فينوي بقلبه الصيام بعد المغرب وقبل طلوع الفجر ولو قال في النية نويت صيام يوم غد عن أداء فرض رمضان هذه السنة إيمانا واحتسابا لله تعالى كان أكمل .

நோன்பில் நிய்யத் வைப்பது அவசியமாகும். ம.்.ரிபானதிலிருந்து பஜ்ர் ஆவதற்கு முன்னுள்ள நேரத்திலே நோன்பு நோற்பதை உள்ளத்தினால் நிய்யத் வைப்பான்.

அவன் உள்ளத்தினால்

نويت صيام يوم غد عن أداء فرض رمضان هذه السنة إيمانا واحتسابا لله تعالى

என்று கூறுவது பரிபூரணமானதாகும்.

والصيام هو الامتناع عن المفطرات ومنها :

நோன்பு என்பது அதை முறிக்ககூடிய விடயங்களை விட்டும் தவிர்ந்து கொள்வதாகும்.

நோன்பை முறிக்கும் விடயங்களில் சில :

الأكل ' ولو لقمة خبز واحدة أقل .

சாப்பிடுதல் : அது ஒரு பிடி ரொட்டி அளவோ அல்லது அதை விட மிகக் குறைவானதாகவோ இருப்பினும் சரியே.

والشرب ' ولو شربة ماء قليلة أو أقل .

குடித்தல் : அது ஒரு மிடர் தண்ணீரோ அல்லது அதை விட மிகக் குறைவானதாகவோ இருந்தாலும் சரியே.

وإدخال كل ما له حجم ولو صغيرا إلى الرأس أو البطن أو الأمعاء
من منفذ مفتوح كالفم والأنف وذلك من طلوع الفجر إلى مغيب
الشمس ' مع النية

அளவு கொண்ட பொருள் அது சிறியதாக இருந்தாலும் சரியே வாய், மூக்கு போன்ற திறந்த துவாரங்களினூடாக உள் நுழைத்தல். இவ்வாறு பஜ்ர் உதித்தது முதல் ம.்.ரிப் வரை (நோன்பு நோற்கின்றேன் என்ற) நிய்யத்துடன் நோன்பை முறிக்கும் விடயங்களை விட்டும் தவிர்ந்திருத்தல்.

أما من أكل أو شرب أو فعل غير ذلك من المفطرات ناسيا فلا يفطر

.

யாரேனும் ஒருவர் மறதியாக சாப்பிட்டால் அல்லது குடித்தால் அல்லது அவ்விரண்டுமல்லாத நோன்பை முறிக்கும் விடயங்களில் ஒன்றை மறதியாக செய்தால் நோன்பு முறிந்துவிடமாட்டாது.

دعاء
اللهم لك صمت وعلى رزقك أفطرت وبك ءامنت وعليك توكلت .

# فصل

# الأخلاق الإسلامية

# இஸ்லாம் கூறும் நற்குணங்கள் பற்றிய விபரம்

பாடம் : 1 الدرس : 1

# المسلم الصالح

# ஸாலிஹான முஸ்லிம்

المسلم الصالح يؤدي الواجبات

كالصلوات الخمس

ஸாலிஹான முஸ்லிம் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுவது போன்று ஏனைய கடமைகளையும் நிறைவேற்றுவார்.

المسلم الصالح يجتنب المحرمات كالكذب وشرب الخمر

ஸாலிஹான முஸ்லிம் பொய் மற்றும் மது அருந்துதல் போன்ற விடயங்களை தவிர்ந்து கொள்வது போல ஏனைய ஹறாமான விடயங்களையும் தவிர்ந்து கொள்வார்.

المسلم الصالح من شأنه أنه لا يرتكب الجرائم

பாவகாரியங்கள் செய்யாமல் இருப்பது ஸாலிஹான முஸ்லிமின் பண்பாகும்.

المسلم الصالح من شأنه أنه أمين لا يسرق

திருடும் குணமில்லாத நேர்மையானவனாக இருப்பது ஸாலிஹான முஸ்லிமின் பண்பாகும்.

المسلم الكامل يحب الخير ويكره الشر

ஸாலிஹான முஸ்லிம் நலவை மாத்திரமே விரும்புவார். கெடுதியை வெறுப்பார்.

பாடம் : 2 الدرس : 2

## الصدق

## உண்மை பேசுதல்

الصدق من صفات المسلم الصالح فمن شأنه

أنه لا يكذب

உண்மை பேசுவது ஸாலிஹான முஸ்லிமின் பண்புகளில் ஒன்றாகும்.

ஆவர் பொய் பேசமாட்டார்.

الكذب شر لا يحبه الله

பொய் பேசுவது அல்லாஹ் பொருந்திக் கொள்ளாத ஒரு பாவகாரியமாகும்.

أنا أحب الصدق وأكره الكذب

நான் உண்மை பேசுவதையே விரும்புகின்றேன். போய் பேசுவதை வெறுக்கின்றேன்.

قال الله تعالى

وكونوا مع الصادقين

سورة التوبة ءاية 119

**அல்லாஹ் கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“நீங்கள் சொல்லாலும் செயலாலும் உண்மையாளர்களோடு ஆகிவிடுங்கள்.”**

**(அத்தியாயம் : அத்-தெளபஹ் வசனம் : 119)**

பாடம் : 3 الدرس : 3

# حسن الخلق

## நற்பண்புகள்

حث الإسلام على التجمل بالأخلاق الحسنة

இஸ்லாம் நற்பண்புகளின் மூலம் (மு.ஃ.மின்கள்) அழகு பெற்றுக்கொள்வதை தூண்டுகின்றது.

المسلم الكامل لا يؤذي المسلمين ويبذل لهم المعروف

ஸாலிஹான முஸ்லிம் பிற முஸ்லிம்களை நோவினை செய்யமாட்டார். மாறாக அவர்களுக்கு உபகாரம் செய்வார்.

المسلم الكامل يقابل المسلمين بطلاقة وجه

ஸாலிஹான முஸ்லிம் பிற முஸலிம்களை புன்னகையுடன் முன்னோக்குவார்.

المسلم الكامل يحسن لمن أساء إليه

ஸாலிஹான முஸ்லிம் அவருக்கு தீங்கிழைத்தவருக்கு உபகாரம் செய்வார்.

المسلم الكامل يتحمل الأذى ولا يغضب لأمر تافه

ஸாலிஹான முஸ்லிம் பிறர் செய்யும் நோவினைய சகித்துக் கொள்வார். (தாங்கிக்கொள்வார்). அற்பமான விடயங்களுக்காக கோபம் கொள்ளமாட்டார்.

قال النبي ﷺ

والكلمة الطيبة صدقة

رواه البخاري

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

“நல்ல வார்த்தை பேசுவதும் ஸதகாவாகும்.”

(அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

பாடம் : 4 الدرس : 4

## طاعة الوالدين

## பெற்றோருக்கு கட்டுப்படல்

قال الله تعالى

ووصينا الإنسان بوالديه حملته أمه وهنا على وهن وفصاله في عامين أن اشكر لي ولوالديك إلي المصير

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :

விளக்கம் :

“ நான் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் அன்பு கொண்டு அரவணைத்துக் கொள்வது ) பற்றி நல்ல உபதேசமும் செய்தோம்., அவனுடைய தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனம் அடைந்தவளாக அவனைச் சுமந்தாள்., இன்னும் ( அவனுக்கு பால் குடி மறக்கடித்து ) அவன் பிரிவது இரண்டு வருடங்களிலாகும்., ( ஆகவே மனிதனே! ) “ நீ எனக்கும், உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக ., ( முடிவில் ) எனது ரஹ்மத்தின் பால் உனது மீளுதல் இருக்கிறது.”

طاعة الوالدين في غير معصية الله من البر الذي حض الله تعالى عليه ووعد فاعله بالثواب الجزيل في الآخرة

அல்லாஹ்வுக்கு மாறு செய்யாத விடயங்களிலே பெற்றோருக்கு கட்டுப்படுவதையே அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். இவ்வாறு நடந்து கொள்பவருக்கு

மறுமையிலே பெரும் கூலியை வழங்குவதாக வாக்களித்துள்ளான்.

ينبغي على المسلم أن يعامل والديه معاملة حسنة

ஒரு முஸ்லிம் பெற்றொருடன் நல்ல முறையில் நடந்துகொள்வது அவசியமாகும்.

ينبغي على المسلم أن يتأدب مع والديه فلا يرفع صوته بحضرتهما

ஒரு முஸ்லிம் பெற்றோருடன் ஒழுக்கமாகவும் அவர்கள் முன்னிலையில் சப்தத்தை உயர்த்தாமலும் இருப்பது அவசியமாகும்.

பாடம் : 5 الدرس : 15

## عقوق الوالدين

## பெற்றோரை நோவினை செய்தல்

قال الله تعالى

فلا تقل لهما أف ولا تنهرهما وقل لهما قولا كريما

سورة الإسراء \ ءاية 23

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :

விளக்கம் :

**“அவ்விருவருக்கும் (இழித்துக்கூறப்படும் வார்த்தைகளிலுள்ள) “ சீ ” என்று (கூட) நீ சொல்ல வேண்டாம்., (உம்மிடமிருந்து) அவ்விருவரையும் விரட்டி விடவும் வேண்டாம்., அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக!”**

(அத்தியாயம் அல்-இஸ்றாஉ வசனம் : 23)

ينبغي على المسلم أن يتجنب كل ما يؤذي والديه

ஒரு முஸ்லிம் பெற்றோருக்கு நோவினை தருகின்ற அனைத்து விடயங்களை விட்டும் தவிர்ந்து கொள்வது அவசியமாகும்.

من يعامل والديه معاملة سيئة و يؤذيهما أذا شديدا يكون عاقا لهما

யார் பெற்றோருடன் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்கிறாரோ மேலும் அவர்களுக்கு கடுமையான முறையில் நோவினை

செய்கிறாரோ அவர் அவர்களுக்கு கொடுமை செய்தவராக ஆகிவிடுவார்.

والعاق لوالديه لا يكون عند الله من المتقين الصالحين

பெற்றோருக்கு நோவினை செய்பவர் அல்லாஹ்விடத்தில் தக்வாவுடைய ஸாலிஹானவர்களின் கூட்டத்தில் இருக்கமாட்டார்.

من بر والديه تكون عاقبته حميدة

யார் பெற்றோருக்கு உபகாரம் செய்கிறாரோ அவரது கடைசி முடிவு நல்ல முடிவாக ஆகிவிடும்.

عليكم ببر الوالدين فإنه بركة في الدنيا والآخرة

பெற்றோருக்கு உபகாரம் செய்வதை கடைபிடியுங்கள். ஏனெனில் அது ஈருலகிலும் (அதிக நலவைப் பெற்றுத் தரும்) பறக்கத்தாகும்.